22 டிசம்பர் 2024
திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

**எதிர்நோக்கின் திருப்பயணிகள்**




# உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்

மேடை அமைக்கப்பட்டுவிட்டது. வரும் நாட்களில் கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாடப்படும். இன்றைய வாசகங்கள் சில மகிழ்ச்சியான ஆளுமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றன. முதலில் கருப்பையில் இருக்கும் இரண்டு குழந்தைகள் - திருமுழுக்கு யோவான் மற்றும் இயேசு. மேலும் அவர்களின் அன்னையர்களான எலிசபெத்து மற்றும் அன்னை மரியா. திருமுழுக்கு யோவானோ அவரது மனம்திரும்புதலுக்கான போதனையிலோ இப்போது கவனம் செலுத்தப்படவில்லை.

இறைவாக்கினர் மீக்கா எப்ராத்தா-பெத்லகேம் என்ற தெளிவற்ற இடத்தைப் பற்றிக் கூறுவதைக் கேட்கிறோம். யூதாவின் குலங்களிலே மிகச் சிறியது என்று இறைவாக்கினர் குறிப்பிடுகிறார். இருந்தபோதும் மிகப்பழமையானதும் பூர்வீகமுமான இந்த இடத்திலிருந்துதான் இஸ்ராயேலை ஆட்சிசெய்யப்போகிறவர் வருவார்.

பின்னர், குழந்தையுடன் இருக்கும் தனது உறவினரான எலிசபெத்தை சந்திக்க மரியா விரைந்த அந்த இடத்திற்கு நாமும் செல்கிறோம். அந்த சிறிய யூத நகரத்திற்குப் பெயர்கூட வைக்கப்படவில்லை. இரண்டு அன்னையர்கள் சந்திக்கிறார்கள், எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. மரியாவின் வயிற்றில் உள்ள குழந்தை தெய்வீகமானது என்பதை எலிசபெத்து அடையாளம் கண்டுகொண்டு “என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி என்று உரத்தகுரலில் புகழ்ந்தார்.

இறைவனின் பிரசன்னத்தைப் பெறும்போது ஏற்படும் மகிழ்ச்சி அத்தகையது. மேலும் இறைவனின் பிரசன்னமான ஆண்டவரைத் தாங்கிக்கொண்டிருப்பவர் அவரின் தாய். மரியா தனது வயதான உறவினருக்கு முன்வந்து உதவிசெய்தார். இதன் சாரம், மரியா நமக்கு வழிகாட்டுகின்றார். கிறிஸ்து மனுவுரு எடுத்து நம்மிடையே வாழப்போகிறார். அவரின் வாழ்வு ஏழ்மையில் பிறந்து சிலுவை மரணத்தில் முடிவடையும். கிறிஸ்துவின் சிலுவைமரணத்தையும், மீட்பையும் நாம் நினைக்காமல் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடமுடியாது.

எபிரேயர்களுக்கு எழுதிய கடிதத்தில் கடவுள் மிருகங்களைப் பலியிடும் பாவம்போக்கும் பலியிலும் எரிபலி காணிக்கைகளிலும் ஆர்வம் காட்டவில்லை. மாறாக கடவுள் தம்முடைய மகனுக்காக ஓர் உடலை தயார் செய்து, அந்த ஒன்றையும் நிபந்தனையின்றி மீண்டும் தந்தைக்குப் படைக்கச் செய்கிறார் என்று வாசிக்கின்றோம்.

“இதோ ஆண்டவரே, உம் திருவுளத்தை நிறைவேற்ற வருகிறேன்” இதைத் தான் நாம் பின்பற்றவேண்டுமென்று இயேசு விரும்புகிறார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், முற்றிலுமாக மற்றும் நிபந்தனையின்றி செய்யவேண்டும். அவரின் தாய் விண்ணகத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் நமக்கு முன்மாதிரி காட்டினார். “நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்”

நம்மிடம் இழக்க ஏதேனும் உள்ளதா? அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துகள்

எதிர்நோக்குக்கு இரண்டு அழகான மகள்கள். அவர்களின் பெயர் கோபம் மற்றும் துணிவு. காரியங்கள் அதன்போக்கில் நடந்துகொண்டிருக்கும் விதத்தில் கோபமும், அவை அப்படியே இருக்காமல் பார்த்துக்கொள்வதில் துணிவும் இருக்கும்

புனித ஹிப்போ அகஸ்டின்







**இன்றைய இறைவார்த்தை:**

மீக்கா 5:1-4

திபா: 80: 2-3, 15-16, 18-19

எபிரேயர் 10: 5-10

லூக்கா 1: 39-45

INTERNAL CIRCULATION ONLY
BUL 51/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org